*1*

# சுவிசேஷ விபரங்கள்

*தொடங்குவதற்கு: இயேசுவின் வாழ்வு பற்றிய நான்கு (சுவிசேஷ) விபரங்கள், "வாழ்க்கை வரலாறு" என்று அழைக்கப்படும் இலக்கிய வகையைச் சேர்ந்தவைகளாக உள்ளன. படிக்கப்படும் வசனப்பகுதியில் உள்ள நிகழ்வுகள் அல்லது மேற்கோள்கள், ஒன்றுக்கு மேற்பட்ட (சுவிசேஷ) விபரத்தில், இணையைக் கொண்டிருக்கலாம். இந்தப் பாடத்தில் இயேசுவின் உவமைகளுக்கு விளக்கம் அளித்தலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.*

## ஒரு அறிமுகம்

மத்தேயு, மாற்கு, லுக்கா மற்றும் யோவான் என்ற நான்கு சுவிசேஷ விபரங்களும், இயேசுவின் வாழ்வு பற்றிய வரலாற்றைக் கூறுகின்றன. இவைகள் வேதாகமத்தின் இருதயம் போன்ற மையப்பகுதி என்று நினைக்கப் படலாம். பழைய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு விஷயமும், வரவிருந்த மேசியாவை முன்னெதிர் நோக்கின. "இயேசு வருகிறார்!" என்பதே பழைய ஏற்பாட்டின் ஆய்வுக்கருத்தாக இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாடு சுட்டிக்காண்பித்த ஒருவரைப் பற்றி சுவிசேஷப் புத்தகங்கள் கூறுகின்றன; இவைகள், "இயேசு வந்திருக்கிறார்!" என்று அறிவிக்கின்றன. புதிய ஏற்பாட்டின் - நடபடிகள், நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் என்ற - எஞ்சிய பகுதி யாவும், அவரது வருகையின் தனிச்சிறப்பு மற்றும் அவரது மறுவருகையின் முன்னுரைத்தல் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன; இவைகள், "இயேசு மீண்டும் வருகிறார்!" என்று அறிவிக்கின்றன.

### "சுவிசேஷம்" என்ற வார்த்தை அர்த்தப்படுத்துவது என்ன?

"சுவிசேஷம்" (*euangelion*) என்ற வார்த்தை "நற்செய்தி" என்று அர்த்தப்படுகிறது. ஒரு கருத்தில், ஒரே ஒரு சுவிசேஷம் - இயேசுவின் ஒரே வரலாறு - தான் உள்ளது. நான்கு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும், அந்த வரலாற்றைச் சற்றே மாறுபட்ட கண்ணோட்டக் கருத்தில் கூறுகிறது; ஆகவே, இந்த விபரங்கள் ஒவ்வொன்றும் தோற்றகால மொழியில், "மத்தேயு [அல்லது மாற்கு அல்லது லுக்கா அல்லது யோவான்] எழுதியபடி சுவிசேஷம்" என்று அழைக்கப்பட்டுள்ளது.

இயேசுவின் வாழ்வு பற்றி நான்கு விபரங்களைத் தேவன் ஏவியது ஏன்? ஏன் ஒரே ஒரு விபரம் மாத்திரம் தரப்படவில்லை? எவரொருவரும் இதை அறிவதில்லை. நாம் "நான்கு காற்றுகள்" மற்றும் "பூமியின் நான்கு மூலைகள்" என்று குறிப்பிடுவது போன்றே, நான்கு சுவிசேஷ விபரங்கள் இருக்க வேண்டியது தவிர்க்க இயலாததும், சரியானதும் ஆகும் என்று பழங்கால எழுத்தாளர்கள் நினைத்தனர். குறைந்தபட்சம் நாம் பின்வருமாறு கூற முடியும்: கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் போதனைகள் ஆகியவற்றிற்கு நான்கு சாட்சிகள் என்பவை, சுவிசேஷங்களில் சித்தரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளின் உண்மை நிலைக்கு

மேன்மையான சாட்சியத்தையும் கிறிஸ்துவின் மீது மாபெரும் மதிப்பையும் நமக்கு கொடுக்கின்றன. அவரை ஒரே ஒரு கோணத்தில் இருந்து பார்ப்பதைவிட நான்கு கோணங்களில் இருந்து பார்ப்பது இன்னும் சிறப்பானதாக உள்ளது. இந்த சுவிசேஷ நான்கு கோணங்களில் இருந்து பார்ப்பது இன்னும் சிறப்பானதாக உள்ளது. இந்த சுவிசேஷ விபரங்களில் ஏதாவது ஒன்றை நாம் இழந்து போனாலும், நாம் வறியவர்களாக இருப்போம்.

### சுவிசேஷங்கள் எந்த தோரணை அல்லது இலக்கிய வகையைச் சேர்ந்தவைகளாக உள்ளன?

சுவிசேஷப் புத்தகங்களை நாம் “வாழ்க்கை வரலாறு” என்று அழைக்கலாம், ஆனால் இவைகள் பெரும்பான்மையான மற்ற வரலாற்றுப் புத்தகங்களைப் போல் இருப்பதில்லை. இவைகள் இயேசுவின் குழந்தைப் பருவம், இளமைப் பருவம் மற்றும் முந்திய வயதுப் பருவம் ஆகியவற்றைப் பற்றிச் சிறிதளவு தகவல்களையே தருகின்றன. இவைகள் பெரும்பான்மையாக, அவர் முப்பது வயதானபோது தொடங்கிய, அவரது வெளிப்டையான ஊழியத்தைப் பற்றியே கூறுகின்றன. அப்பொழுதும்கூட அவைகள் தேர்ந்துகொண்ட தகவல்களை மாத்திரமே தருகின்றன; இவைகள் இயேசு வாழ்ந்திருந்த பன்னிரெண்டாயிரம் நாட்களில் சுமார் ஐம்பது நாட்களின் விபரங்களை மாத்திரமே தருகின்றன, இவைகள், இயேசுவின் வாழ்வின் கடைசி வாரத்தில் நடந்தவை பற்றிக்கூற அதிகமான காலத்தையும் இடத்தையும் செலவிடுகின்றன.[1] வாழ்க்கை வரலாற்றின் பொதுவான வகையில் இருந்து இவைகள் மாறுபட்டிருப்பதால், சுவிசேஷங்களைக் கல்வியாளர்கள் தங்கள் சொந்த இலக்கிய வகையில் வைக்கச் சாய்கின்றனர்.

### சுவிசேஷப் புத்தகங்கள் வரலாற்றுடன் கொண்டுள்ள தொடர்பு என்ன?

சுவிசேஷ எழுத்தாளர்கள், வரலாற்றைப் பதிவுசெய்ய முயற்சி செய்தனரா? அவர்கள், ஆர்வம் கொள்ள இயலாத, புறப்பொருள் சார்ந்த வகையான வரலாற்றை எழுத நோக்கம் கொண்டிருக்கவில்லை. (முற்றிலும் புறப்பொருள் சார்ந்த ஒரு வரலாற்றாளரால் எழுதப்பட்ட வரலாறு என்பதாக ஒரு விஷயம் உள்ளதா என்பது சந்தேகம் நிறைந்ததாகவே உள்ளது.) மாறாக, சுவிசேஷ எழுத்தாளர்கள், ஒரு கருத்தில், *இறையியலை* எழுதவே நோக்கங் கொண்டிருந்தனர். முன்வைப்பதற்கு, மார்க்கரீதியான ஒரு செய்தியை, மனிதகுலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவர, இயேசு கிறிஸ்து மூலமாகத் தேவன் செய்தது என்ன என்பது பற்றிய செய்தியை அவர்கள் கொண்டிருந்தனர். ஒரு கருத்தில் சுவிசேஷப் புத்தகங்கள் பிரசங்கங்களாகவே உள்ளன.

மத்தேயு, மாற்கு, லுக்கா மற்றும் யோவான் ஆகியோர் எழுதியவை வரலாற்றுரீதியாக மிகச் சரியானவைகளாகவே உள்ளன. *வரலாற்றில் தேவன் செயல்பட்டார்* என்று அவர்கள் உரிமை கோரினர். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கணத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு, தேவன் தமது குமாரனைப் பூமிக்கு அனுப்பினார். இயேசு கிறிஸ்து என்ற அந்தக் குமாரர், மாம்சத்தில் வந்து இந்த பூமியின்மீது நடந்து, எருசலேமின் மதில்களுக்கு வெளியே ஒரு சிலுவையில் உண்மையாகவே மரணம் அடைந்தார், மற்றும் அவர் கல்லறையில் இருந்து நேர்ப்பொருளில் வெளியே வந்தபோது, அவர் மரித்தோரில் இருந்து

*உயிர்ப்பிக்கப்பட்டார். கிறிஸ்தவத்தின் வரலாற்றுப் பூர்வமான அம்சமே அதை உலகத்தின் மற்ற மதங்களில் இருந்து பிரிக்கிறது, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வரலாற்றுரீதியான உண்மைகளை, சுவிசேஷப் புத்தகங்களில் முன்வைக்கப் பட்டிருப்பதைக் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.*

**சுவிசேஷங்களில் தெளிவாகத் தெரியும் நேரெதிர்க் கருத்துக்களுக்கு நாம் எவ்வாறு விளக்கம் அளிக்க முடியும்?**

*சிலவேளைகளில், வெவ்வேறு சுவிசேஷ விபரங்களில் இசைவின்மை நிலவுவதாகக் காணப்படுகிறது.*[2] *அவற்றைக் குறித்துக் கூறப்பட முடிவது என்ன?*

இசைவின்மை என்று அழைக்கப்படும் இவ்விஷயங்கள், அதிகமாக வலியுறுத்தப்பட்டவைகளாக இருக்க முடியும். சுவிசேஷப் புத்தகங்கள் யாவும், ஒரே அடிப்படை வரலாற்றைக் கூறுகின்றன. (1) யோவான் ஸ்நானனின் ஊழியத்தினால் இயேசுவின் ஊழியம் ஆயத்தம் செய்யப்பட்டது. (2) இயேசு தமது வெளிப்படையான ஊழியத்தில், போதித்து அற்புதங்கள் நிகழ்த்தினார். (3) அவர் தமது வெளிப்படையான ஊழியத்தின் முடிவில், ஏறக்குறைய ஒரு வாரத்தை எருசலேமில் செலவிட்டார், அந்தக் காலகட்ட முடிவில் அவர், யூதர்களின் வலியுறுத்தத்தினால் பொந்தியு பிலாத்தின் கட்டளையின் பேரில் சிலுவையில் அறையப்பட்டார். (4) அவர் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டு, தமது அப்போஸ்தலர்களுக்கும் மற்றவர்களுக்கும் தம்மை உயிரோடிருப்பவராகக் காண்பித்தார்.

விரிவான, ஒருங்கிணைக்கப்பட்ட இந்த வரலாற்றிற்குள் காணப்படுகிற தெளிவான நேரெதிர்க் கருத்துக்களுக்கு விளக்கம் அளிக்க வழிகள் உள்ளன.[3] சாத்தியமான நேரெதிர்க் கருத்துக்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்போது, *உரைக்கப்பட்ட இரு கூற்றுகளும் உண்மையாக இருக்க முடியாது என்றால் மாத்திரமே, அந்தக் கூற்றுகள் உண்மையாகவே நேரெதிராக உள்ளன* என்பதை நினைவில் வைத்தல் முக்கியமானதாக உள்ளது. அத்துடன் கூடுதலாக, சுவிசேஷப் புத்தகங்களுக்கு இடையில் மெய்ப்பிக்கப் படாத நேரெதிர்க் கருத்துக்கள் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, பின்வரும் கருத்துக்களை நமது சிந்தையில் காத்துக் கொள்ள வேண்டும்:

(1) சுவிசேஷ எழுத்தாளர்கள் வெவ்வேறு நோக்கங்களைக் கொண்டிருந்தனர். நேரெதிர்க் கருத்துக்களாகத் தெளிவாகத் தோன்றுபவை அவர்களின் வெவ்வேறு இலக்குகளின் விளைவாக இருக்கலாம்.

(2) சுவிசேஷ எழுத்தாளர்கள் வெவ்வேறு ஒழுங்குபடுத்தும் கொள்கைகளைப் பயன்படுத்தினர். ஒரு சுவிசேஷ விபரம் அதிகமாக நாள்வரிசை முறைமையைச் சார்ந்ததாக இருக்கையில், இன்னொன்று அதிகம் தலைப்பு முறையைச் சார்ந்ததாக இருக்கலாம்.

(3) இயேசு, பாடக்கருத்துக்களின் மிகப்பரவலான பல்வேறு வகைகளைப் போதிக்கும் திறன் கொண்டிருந்தார், அவர் தமது உரையைக் கேட்பவர்கள் மற்றும் அவர்களின் தேவைகளைப் பொறுத்து, மாறுபட்ட விஷயங்களை வலியுறுத்தினார். மேலும் அனேகமாக அவர் (இன்றைய நாட்களில் பிரசங்கியார்கள் செய்வது போல) வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஒரே பாடத்தைப் பிரசங்கித்திருக்கலாம்.

***"ஒப்பீட்டுப் பிரச்சனை" என்றால் என்ன?***

*பிரசச்சனையை விளக்கப்படுத்துதல். சுவிசேஷங்கள் சிலவேளைகளில் ஒன்று மற்றொன்றுடன் முரண்படுகின்றன என்ற உண்மையானது கல்வியாளர்களால் ''ஒப்பீட்டுப் பிரச்சனை'' என்று அடிக்கடி கலந்துரையாடப்படுகிறது. சுவிசேஷங்களில் - மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா என்ற - மூன்று புத்தகங்கள் ஒன்றுபோல் உள்ளன; அவைகள் ''ஒப்பீட்டு சுவிசேஷங்களாக'' உள்ளன. அவைகள் ''ஒன்றுபோல காணுகின்றன'' ''Synoptic'' (என்பதன் நேரடியான அர்த்தம் இதுதான்); அதாவது, இவைகள், இயேசுவைப் பற்றி ஒரே மாதிரியான கண்ணோக்கை முன்வைக்கின்றன. யோவான் எழுதிய மற்றொரு சுவிசேஷம் மாறுபட்டதாக உள்ளது.*

*ஒப்பீட்டுப் பிரச்சனை என்பது மூன்று சுவிசேஷங்கள் ஒரேமாதிரியாகவும் ஒன்று மாறுபட்டதாகவும் உள்ளது என்பதோடு நின்றுவிடுவதில்லை, ஆனால் ஒப்பீட்டு சுவிசேஷங்களுக்கு மத்தியில் உள்ள ஒருமைப்பாட்டின் அளவும் திகைக்கச் செய்வதாக உள்ளது. குறிப்பாக, இவைகள் யாவும், ஒரேவிதமான வரலாறுகளை ஒரேவிதமான வார்த்தைகளைக் கொண்டு கூறுகிற விஷயமானது விளக்கம் தேவைப்படுவதாகக் காணப்படுகிறது.[4] எவரெட் ஹாரிஸன் அவர்கள், "சூழ்நிலையின் மேம்போக்கான கண்ணோக்கு" ஒன்றை அளிப்பதற்கு, "சதவிகித அடிப்படையில் சுவிசேஷங்கள் யாவற்றிலும் உள்ள பாடக்கருத்துக்கள் பற்றிய வெஸ்ட்காட் அவர்களின் அட்டவணை" என்பதைத் தரும் ஒரு விபரப்படத்தை உள்ளடக்கினார்:*

| | *தனித்தன்மைகள்* | *கருத்துப் பொருத்தங்கள்*[5] |
|---|---|---|
| *மாற்கு* | *7* | *93* |
| *மத்யேு* | *42* | *58* |
| *லூக்கா* | *59* | *41* |
| *யோவா* | *92* | *8*[6] |

*ஒரே விதமான தன்மைகளின் அளவானது, இந்தக் கோட்பாட்டிற்குக் கல்வியாளர்கள் ஒரு விளக்கத்தை நாடக் காரணமாயிற்று.*

*சாத்தியமான தீர்வுகள்.* *ஒப்பீட்டு சுவிசேஷங்களுக்கு இடையில் உள்ள ஒத்ததன்மைகளுக்கு நாம் எவ்வாறு விபரம் அளிக்க முடியும்? குறைந்தபட்சம் நான்கு விளக்கங்கள் சாத்தியமானவைகளாக உள்ளன. (1) ஒப்பீட்டு சுவிசேஷ விபரங்கள் யாவும் அசலாக உள்ளன, மற்றும் சுவிசேஷ எழுத்தாளர்கள், ஒருவர் மற்றவரின் எழுத்துக்கள் பற்றி எவ்வகையிலும் அறியாது, தங்கள் சொந்தமாகவோ அல்லது ஏவுதலினாலோ, ஒரேவிதமான வார்த்தைகளில் எழுதினர். (2) ஒப்பீட்டு சுவிசேஷங்கள் யாவையும், ஒரே வாய்மொழிப் பாரம்பரியத்தில் இருந்து தங்கள் வார்த்தைகளைப் பெற்றனர். (3) ஒப்பீட்டு சுவிசேஷங்கள் யாவையும் தங்களில் எதைப்போன்றும் இராத ஒரு பொதுவான ஆதாரமூலத்தைக் கொண்டிருந்தன. (4) ஒப்பீட்டு சுவிசேஷப் புத்தகங்களின் எழுத்தாளர்கள் ஒருவர் மற்றவருடன் எழுத்துக்களை ஏதோ ஒருவகையில், அதாவது ஒரு விபரம் இன்னொன்றிற்கு ஆதாரமூலமாக இருக்கும்படி, பயன்படுத்தினர். இவற்றில் நான்காவது கருத்துதான் புதிய ஏற்பாட்டுக் கல்வியாளர்களால் வழக்கமாக விரும்பித் தேர்ந்துகொள்ளக் கூடிய ஒன்றாக உள்ளது.[7]*

இரண்டு ஆதாரமூலக் கோட்பாடு நான்காவது கருத்தின் மிகப்பொதுவான பதிப்பாக உள்ளது - இது, மாற்கு சுவிசேஷமும் *Q* (இது "ஆதாரமூலம்" என்று அர்த்தப்படும் *Quelle* என்ற ஜெர்மன் மொழி வார்த்தையில் இருந்து வந்ததாகும்) என்று அறியப்பட்ட ஒரு பதிவேடும் ஒப்பீட்டு சுவிசேஷங்களுக்கு இரண்டு அடிப்படை ஆதாரமூலங்களாக இருந்தன என்பதாகக் கூறப்படுகிறது. இந்தக் கருத்தின்படி, மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் தங்கள் சுவிசேஷப் புத்தகங்களை எழுதுவதற்கு, மாற்கு சுவிசேஷத்தையும் *Q* என்பதையும் (இது இயேசுவின் போதனைகளைப் பெரும்பகுதி உள்ளடக்கியதாகும்) பயன்படுத்தினர். இந்த விஷயத்தில் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகியோர் பொதுவில் கொண்டுள்ளவை, மாற்கு சுவிசேஷத்தில் இருந்தே தோன்றின என்றாகிறது; மற்றும் மாற்கு சுவிசேஷத்தில் இல்லாது, மத்தேயுவும் லூக்காவும் பொதுவில் கொண்டிருந்தவை *Q* என்பதில் இருந்து வந்தது என்றாகிறது.

*கிறிஸ்தவரின் பதில்செயல்.* ஒப்பீட்டுப் பிரச்சனை தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு, வேதாகமத்தை விசுவாசிப்பவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும்?

முதலாவது நாம், *ஒப்பீட்டுப் பிரச்சனை என்பது உண்மையிலேயே ஒரு பிரச்சனை அல்ல என்பதை உணர்ந்தறிய வேண்டும்* - இது குறைந்தபட்சம், நமது விசுவாசத்தை உலுக்க வேண்டிய பிரச்சனையாகவாவது இருப்பதில்லை. மூன்று சுவிசேஷங்களுக்கு இடையில் உள்ள ஒருமைத்தன்மை (மற்றும் யோவான் சுவிசேஷத்தின் வேற்றுமைத்தன்மை) என்பது, ஏற்றுக்கொள்ளப்படும் விளக்கம் எதுவாக இருப்பினும் ஏவுதலை பொய்யாக்குவதில்லை. சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள், ஏவுதல் பெற்ற அல்லது ஏவுதல் பெறாத மற்ற பதிவேடுகளைப் பயன்படுத்துவதில் அவர்களைத் தேவன் ஏவி இருக்கக் கூடும்.[8]

மற்றும் நாம், பிரச்சனையை "தீர்த்துவைக்காமலேயே" சுவிசேஷங்களைப் பலன் மிக்க வகையில் படித்துப் பிரசங்கிக்க முடியும். ஒப்பீட்டு சுவிசேஷப் புத்தகங்கள் ஒவ்வொன்றையும் மதித்துப் புரிந்து கொள்ளுதல் பற்றி, நாம் எந்த ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டிற்கும் உடன்படத் தேவையில்லை. அவை ஒவ்வொன்றையும் அதனதன் சொந்த நிபந்தனைகளில் வாசித்துப் படித்தல் என்பதே நாம் செய்ய வேண்டிய எல்லாமுமாக உள்ளது; நாம் அவ்வாறு செய்யும்போது, தேவன் விரும்பியவற்றை நாம் அதில் இருந்து பெறக்கூடியவர்களாக இருக்கிறோம்.

**சுவிசேஷங்களின் நோக்கம் என்ன?**

சுவிசேஷங்கள் எழுதப்பட்டது ஏன்? சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் தனது சொந்தக் குறிக்கோளை (குறிக்கோள்களை) கொண்டிருக்கையில், அவைகள் பொதுவில் சில நோக்கங்களைக் கொண்டுள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. பல சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன; அவைகள் பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு அல்லது எல்லா நோக்கங்களுக்காகவும் எழுதப்பட்டிருக்கலாம்:

(1) இயேசுவைப் பற்றிய, அப்போஸ்தலர்கள் மற்றும் சுவிசேஷ ஊழியர்களின் போதனைகளை நிரந்தரமான வடிவத்தில் பாதுகாப்பதற்கு.

(2) சபைக்கு ஒரு வழிகாட்டுதலை அளிப்பதற்கு. கிறிஸ்துவின் சீஷர்கள், எதை விசுவாசிப்பது மற்றும் எவ்வாறு நடந்துகொள்வது என்பதற்கும், தாங்கள் ஏற்றுக்கொண்டிருந்த சத்தியங்களின் மாபெரும் உறுதிப்பாட்டைக்

கொண்டிருப்பதற்கும், கிறிஸ்துவின் வாழ்வு மற்றும் போதனைகள் பற்றிய பதிவேடு ஒன்று அவர்களுக்குத் தேவைப்பட்டிருந்தது.

(3) சபைக்குள்ளும் சபைக்குப் புறம்பேயும் உள்ள கள்ளப் போதகர்களிடம் இருந்து வந்த கள்ளப் போதனைகளை மறுத்துரைப்பதற்கு.

(4) சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்குச் சுவிசேஷ ஊழியம் செய்வதில் உதவுவதற்கு.

### சுவிசேஷங்களைப் படிக்கத் தொடங்குகையில் அவற்றைப் பற்றி நாம் அறிய வேண்டியது என்ன?

சுவிசேஷ விபரம் ஒவ்வொன்றையும் நாம் புரிந்துகொள்வதற்கும், அதன் எழுத்தாளர், எழுதப்பட்ட தேதி, ஆய்வுக்கருத்து அல்லது வலியுறுத்தம் மற்றும் நோக்கம் ஆகியவற்றைப் பற்றி நாம் விசாரிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. நான்கு சுவிசேஷங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சுருக்கமான அறிமுகம் பின்வருமாறு.[9]

*மத்தேயு சுவிசேஷம்*, வரிவசூலிப்பவராக இருந்து அப்போஸ்தலர்களில் ஒருவரான மத்தேயுவினால் எழுதப்பட்டது, இது கி.பி. 60களின் மத்தியில் எழுதப்பட்டிருக்க அதிக வாய்ப்புள்ளது. இந்த சுவிசேஷ விபரம், இயேசுவை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவாகவும் மேசியாத்துவ இராஜ்யத்தின் அரசராகவும் முன்வைக்கிறது. யூதர்களுக்கு அல்லது யூதர்கள் மத்தியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது என்று தெளிவாகக் காணப்படும் இது, இயேசுவின் இராஜ்யம் மற்றும் போதனைகளை வலியுறுத்துகிறது. இது (நாள்வரிசைப்படி என்பதற்கு மாறாக) தலைப்பு ரீதியாக சில சாட்சியங்களைக் கொடுத்து தான் விரும்பிய நோக்கத்தின்படியே குறைந்தபட்சம் ஒரு பகுதியில், கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும் என்று போதிக்கிறது. இது மேன்மையான ஒரு நீதிக்கு அழைப்பு விடுத்தலை அடக்கியுள்ளது (மத்தேயு 5:20).

*மாற்கு சுவிசேஷம்*, இது சுவிசேஷப் புத்தகங்களிலேயே மிகச் சுருக்கமானதாக உள்ளது, இது ஒருவேளை கி.பி. 57 மற்றும் 60க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம், இது சாத்தியமான வகையில் ரோமாபுரியில் இருந்து தொடக்ககால சீஷரும், முதல் சுவிசேஷப் பயணத்தில் பவுல் மற்றும் பர்னபா ஆகியோருடன் துணையாளராகச் சென்றவருமான யோவான் மாற்குவினால் எழுதப்பட்டிருக்கலாம். பாரம்பரியத்தின்படி, மாற்கு சுவிசேஷம் பேதுருவின் சுவிசேஷத்தை, அதாவது பேதுரு பிரசங்கித்த செய்தியைப் பதிவுசெய்தது. மாற்கு சுவிசேஷம் செயல்பாட்டின் சுவிசேஷமாக, இயேசு போதித்தவற்றைக் காட்டிலும் அவர் செய்தவற்றை அதிகமாக வலியுறுத்துவதாக உள்ளது, குறிப்பாக இது இயேசுவின் அற்புதம் செய்யும் வல்லமையை வலியுறுத்துகிறது. புறஜாதியாருக்கு, விசேஷமாக ரோமாபுரியில் இருந்தவர்களுக்கு எழுதப்பட்டது என்று தெளிவாகக் காணப்படும் நிலையில், இந்த சுவிசேஷம் இயேசுவை வல்லமை நிறைந்த தேவகுமாரன் என்ற வகையில் முன்வைக்கிறது மற்றும் அவரது சீஷர்கள் தங்களையே வெறுத்து அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது.

*லூக்கா சுவிசேஷம்*, இது கிறிஸ்தவத்தின் தொடக்கங்கள் பற்றிய இரு - தொகுதி எழுத்துக்களில் முதல் புத்தகமாக உள்ளது. (மற்றொன்று அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆகும்.) இது புறஜாதியாரும்

மருத்துவருமாக இருந்து, பவுலின் பிந்திய பயணங்களில் அவருடன் இணைந்து சென்ற லூக்காவினால் எழுதப்பட்டது (நடபடிகள் புத்தகத்தில் காணவும்). தெயோப்பிலு என்பவருக்கு எழுதப்பட்ட இந்தக் புத்தகம், ஒரு முன்னுரையுடன் தொடங்குகிறது, இது வரலாற்றில் இயேசுவின் பிறப்பைக் கவனமாகக் குறிக்கிறது, மற்றும் இது சுவிசேஷங்களிலேயே மிகவும் “இலக்கியத்தரம்” வாய்ந்ததாக உள்ளது. ரோமாபுரியில் இருந்து கி.பி. 62ம் ஆண்டு வாக்கில் ஒரு புறஜாதியாருக்காக எழுதப்பட்டிருக்கக் கூடிய இந்தச் சுவிசேஷ விபரம், இயேசு ஆபிரகாமின் சந்ததியில் இருந்து மாத்திரம் அல்ல, ஆனால் ஆதாமின் சந்ததியில் இருந்து தோன்றியவர் என்பதை வலியுறுத்துகிறது. இது, ஏழைகள் மற்றும் நசுக்கப்பட்டவர்கள் மீது இயேசுவின் அக்கறையை வெளிச்சமிட்டுக் காண்பித்து இரட்சிப்பை - குறிப்பாக யூதர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் மனிதகுலம் எல்லாவற்றிற்கும் இயேசுவே இரட்சகராக இருக்கிறார் என்பதை - வலியுறுத்துகிறது.

*யோவான் சுவிசேஷம்*, இது மாறுபட்ட சுவிசேஷமாக உள்ளது. இது இயேசுவின் பிறப்பு அல்லது பிள்ளைப் பருவம் பற்றிய எந்தக் குறிப்பிடுதலையும் விட்டுவிடுகிறது, அதற்குப் பதிலாக அவர் தேவனுடன் சகல நித்தியத்திலும் முன்னிருந்த நிலையைக் கொண்டு தொடங்குகிறது. இது “பிரியமான அப்போஸ்தலரான” யோவானால், கி.பி. 85 மற்றும் 95க்கு இடைப்பட்ட ஒரு காலகட்டத்தில் அனேகமாக எபேசு நகரில் இருந்து எழுதப்பட்டது. இதில் உவமைகள் எதுவும் உள்ளடங்குவதில்லை மற்றும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மிகவும் மனதை ஈர்க்கும் ஒரு சில அற்புதங்களே இதில் எழுதப்பட்டுள்ளன, அவற்றை இது “அடையாளங்கள்” என்று அழைக்கிறது. யோவான் சுவிசேஷம் இயேசுவின் தெய்வீகத்தை (ஏழு அல்லது அதற்கு மேற்பட்ட முறைகள் “நான் இருக்கிறேன்” என்ற கூற்று உள்ளிட) பல வழிகளில் வலியுறுத்துகிறது. இந்த சுவிசேஷத்தின் வலியுறுத்தமும் நோக்கமும் யோவான் 20:30, 31ல் முன்வைக்கப்பட்டுள்ளன:

> இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

## சுவிசேஷங்களுக்கு விளக்கம் அளித்தல்

சுவிசேஷங்களில் இருந்து ஒரு வசனப்பகுதிக்கு நாம் எவ்வாறு விளக்கம் அளிக்க வேண்டும்?

*1. இலக்கியத்தின் மற்ற ஒவ்வொரு வகையைப் போன்றே, நாம் சுவிசேஷங்களின் எந்த வசனப் பகுதிக்கும்கூட, அதன் நேரடியான சந்தர்ப்பப் பொருளிலிருந்தே விளக்கம் அளிக்க வேண்டும்.* சுவிசேஷங்களுக்கு, நேரடி சந்தர்ப்பப் பொருள் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

*இணைவசனங்களுடன் உள்ள உறவு.* ஒரு சுவிசேஷத்தில் இருந்து எந்த வசனப்பகுதிக்கும் விளக்கம் அளித்தலுக்கு, மற்ற சுவிசேஷங்களில் உள்ள இணைவசனப் பகுதிகளை ஆழ்ந்து சிந்தித்தல் தேவைப்படுகிறது. ஒரு வேளையில்

ஒரு சுவிசேஷத்தை மாத்திரம் போதித்தல் அல்லது பிரசங்கித்தல் முற்றிலும் சட்டப்பூர்வமானதாக உள்ளது; ஆனால் அந்த சுவிசேஷத்தில் இருந்து ஒரு வசனப்பகுதியை நாம் ஆராயும்போது, அதற்கு இணையான வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பற்றியாவது நாம் அறிந்திருப்பது அவசியம். இணை வசனப்பகுதிகளைப் படித்தல் என்பது, சுவிசேஷங்களுக்கு இடையில் உள்ள இலக்கிய உறவுகள் பற்றி (ஒப்பீட்டுப் பிரச்சனை பற்றி) ஏதாவது முடிவை நாம் அடைவதை அவசியப்படுத்துவது இல்லை.

*சுவிசேஷத்தின் நோக்கத்துடன் உள்ள உறவு.* சுவிசேஷத்தில் உள்ள எந்த ஒரு வசனப்பகுதியும் அந்த சுவிசேஷத்தின் நோக்கத்தினுடைய வெளிச்சத்தில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு விபரமும் தனது சொந்த வலியுறுத்தங்களையும் இலக்குகளையும் கொண்டுள்ளது; நாம் விளக்கம் அளிக்கும் வசனப்பகுதி, அந்த குறிப்பிட்ட சுவிசேஷத்தின் இலக்குடன் எவ்வாறு உறவுபடுகிறது என்பதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இயேசு செய்தவற்றை வெறும் ஆர்வத்திற்குரிய விஷயம் என்ற வகையில் மாத்திரம் எழுத்தாளர்கள் பதிவுசெய்யவில்லை என்பதை உணர்ந்தறிதல் முக்கியமானதாக உள்ளது. அவர்கள் வரலாற்றை மாத்திரம் எழுதவில்லை. அவர்கள் இயேசுவைப் பற்றித் தாங்கள் பதிவுசெய்ததில் பாடங்களைப் போதித்தனர். ஆகவே, சுவிசேஷங்களின் ஒவ்வொரு வசனப்பகுதியையும் பொறுத்தமட்டில், "இது ஏன் உள்ளடக்கப்பட்டது? இதன் நோக்கம் என்ன? என்று கேட்பது நமக்கு அவசியமாகும்."

2. *இத்துடன் கூடுதலாக, சுவிசேஷங்களில் இருந்து எந்த ஒரு வசனப்பகுதிக்கும் அதன் வரலாற்றுச் சந்தர்ப்பப் பொருளின் வெளிச்சத்தில் விளக்கம் அளித்தல் முக்கியமானதாக உள்ளது.* வரலாற்றுச் சந்தர்ப்பப் பொருள் என்பது இயேசு வாழ்ந்த உலகம் மற்றும் காலம் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. சுவிசேஷங்களைப் புரிந்துகொள்வதற்கு நாம், பின்வருவன போன்ற வரலாற்றுப் பூர்வமான கேள்விகளுக்கு விடைகளைக் கண்டறிதல் அவசியமாக உள்ளது: "முதல் நூற்றாண்டு யூதத்துவம் எவ்வாறு இருந்தது?"; "பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்கள் என்பவர்கள் யார்?"; "முதல் நூற்றாண்டு பாலஸ்தீன நாட்டின் புவியியல் பற்றி நாம் அறிவது என்ன?"; "முதல் நூற்றாண்டில் இருந்த ரோமானிய உலகம் என்பது என்ன?"; "பொந்தியு பிலாத்து போன்ற ரோம ஆளுநர்களின் பணிப்பொறுப்பு என்னவாக இருந்தது?"

ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதியின் வரலாற்றுப் பூர்வமான சந்தர்ப்பப் பொருளை அறிதல் என்பது, கண்டுபிடிப்பை, சாத்தியமான அளவுக்கு, இயேசுவின் வாழ்வின் நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களில் வரிசை அமைவைக் கண்டறிதலையும் உள்ளடக்குகிறது. அது அவரது ஊழியத்தின் முற்பகுதியிலா அல்லது பிற்பகுதியிலா எப்போது நடைபெற்றது அல்லது அதற்குப் சற்று முன்னர் அல்லது பின்னர் நடைபெற்றது என்ன என்பவை, ஒரு நிகழ்வைப் புரிந்துகொள்வதில் குறிப்பிடத்தக்க விஷயமாக இருக்கலாம்.

3. *ஒரு வசனப்பகுதி எந்த சுவிசேஷத்தில் காணப்படுகிறதோ, அந்த சுவிசேஷத்தின் வடிவமைப்புகள், அமைவுகள் ஆகியவற்றுடன் அவ்வசனப்பகுதிக்கு உள்ள உறவில் அதைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமானதாக உள்ளது.* சுவிசேஷங்கள் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு வகையில் ஒருங்கமைக்கப்பட்டுள்ளன அல்லது வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு

குறிப்பிட்ட வசனப்பகுதி ஒரு சுவிசேஷத்தின் வடிவமைப்பிற்குள் எவ்வாறு பொருந்துகிறது என்பதை அறிதலானது, அவ்வசனப் பகுதி மூலமாக அதை எழுதியவர் போதிக்க விருப்பம் கொண்டிருந்தது என்ன என்பதைப் புரிந்து கொள்ள நமக்கு உதவக்கூடும்.

4. *சுவிசேஷங்களுக்கு விளக்கம் அளித்தலுக்கு, ஒவ்வொரு நிகழ்விலும் ஈடுபட்ட இரு கேட்பாளர்களைப் பற்றிச் சிந்தித்தல் தேவைப்படுகிறது.* நாம் ஆராய்ந்துகொண்டிருக்கும் சிறுபத்தியில் (pericope[10]) இயேசு கூறியதாக அல்லது செய்ததாகக் காணப்படும் எதையும் அவர் கூறியபோது அல்லது செய்தபோது, உண்மையில் அங்கிருந்த மக்கள் - அதன் தொடக்ககாலக் கேட்பாளர்கள் அல்லது அதை மேம்போக்காகப் பார்த்தவர்கள் என்பவர்கள் ஒரு வகையான கேட்பாளர்கள் ஆவர். சுவிசேஷ எழுத்தாளர் தமது சுவிசேஷத்தை யாருக்கு எழுதினாரோ அவர்கள் இன்னொரு வகை கேட்பாளர்கள் ஆவர்.[11]

கேள்வியின் கீழ் உள்ள அந்த சந்தர்ப்பத்தில் இயேசு ஏன் அவ்வாறு செயல்பட்டார் என்று தீர்மானிக்க நாம் முயற்சி செய்ய வேண்டும், பின்பு நாம் பின்வருவனவற்றைத் தீர்மானிக்க வேண்டும்: (1) (இயேசு செய்த ஒவ்வொன்றும் தெரிவிக்கப்படவில்லை என்பதால்) சுவிசேஷ எழுத்தாளர் அந்த நிகழ்வைப் பதிவுசெய்யத் தேர்ந்துகொண்டது ஏன் மற்றும் (2) அவர் ஏன் அவ்வாறு பதிவு செய்தார்? எழுத்தாளர், தமது புத்தகத்தை வாசிப்பவருக்கும் நாம் விளக்கம் அளிக்கும் அந்த நிகழ்ச்சியை பற்றிக் கூறுவதன் மூலம் சிலவற்றை நிரூபிக்க அல்லது போதிக்க விரும்பினார் என்று நாம் யூகிக்க முடியும். "இந்த நிகழ்வை அல்லது போதனையை எடுத்துரைப்பதில் எழுத்தாளரின் நோக்கம் என்னவாக இருந்தது?" என்பது நாம் கேட்டு பதில் அளிக்க விரும்பும் கேள்வியாக உள்ளது.

ஒரு சந்தர்ப்பத்தில் இயேசு, ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பப் பொருளில், நல்ல சமாரியன் உவமையை பயன்படுத்தினார். பின்பு லூக்கா அந்த உவமையைத் தமது சுவிசேஷத்தில் உள்ளடக்கத் தேர்ந்து கொண்டார். மற்ற சுவிசேஷ எழுத்தாளர்கள் யாரும் இதை உள்ளடக்கவில்லை, ஆனால் லூக்கா ஒரு குறிப்பிட்ட கேட்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றத் தமது சுவிசேஷத்தை எழுதினார். இந்த உவமைக்கு நாம் விளக்கம் அளிக்கும்போது, இயேசு இதை முன்வைத்த சூழ்நிலைகள் பற்றிப் புரிந்துகொள்ள நாம் முயற்சி செய்ய வேண்டும், அதன்பின்பு நாம், இதை லூக்கா தமது சுவிசேஷத்தில் உள்ளடக்கியது ஏன் என்பதற்கான காரணத்தை நாட வேண்டும்.

5. *சுவிசேஷங்களின் பொருள் விஷயங்கள் இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுகின்றனவா இல்லையா மற்றும் அது எவ்வாறு என்பவற்றைப் பற்றி நாம் தீர்மானித்தாக வேண்டும்.* இயேசு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் வாழ்ந்தார் மற்றும் அவர் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடித்தார். (அவர் நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்திருக்காவிட்டால், அவர் பாவமற்றவராக இருந்திருக்க மாட்டார்.) இந்தக் காரணத்தினால் நாம், இயேசு போதித்தவை நமக்கு நடைமுறைப்படுத்துவதில்லை என்று முடிவுசெய்யக் கூடும்.[12] இருப்பினும் அப்படிப்பட்ட ஒரு முடிவு தவறானதாக இருக்கும். இயேசுவின் குறிப்பிட்ட வார்த்தைகளுடன் தொடர்புடைய சூழ்நிலைகள் பற்றி நாம் கவனமாகச் சிந்திக்கையில்,[13] இயேசுவின் போதனைகள் அவரது சீஷர்களையும்

அவரது சபையையும் வழிநடத்துவதை நோக்கங்கொண்டிருந்தன என்பதையும் நாம் நம்பவேண்டும். உண்மையில், மோசேயின் நியாயப்பிரமாணம் அமுலில் இருந்த காலத்தின் போது இயேசு வாழ்ந்தார் என்றாலும், நியாயப்பிரமாணம் எடுத்துப்போடப்படாத வரையிலும் சுவிசேஷப் புத்தகங்கள் எழுதப்படவில்லை. அவைகள் சபைக்காக மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும்படி எழுதப்பட்டன.

இயேசுவின் போதனைகள் இன்றைய நாட்களில் நமக்கு நடைமுறைப் படுகின்றன. இயேசுவின் போதனைகளில் சிலவற்றை ஏற்றுக்கொண்டு மற்றவற்றைத் தவிர்த்தல் ஆகாது என்பது முக்கியமானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, இயேசு விசுவாசம் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றைப் பற்றிக் கூறிய விஷயங்களை ஏற்றுக்கொண்டு, அதே வேளையில் சீஷத்துவத்திற்கு அவர் முன்வைத்த அடிப்படை நிபந்தனைகளைக் குறைத்துப்போடுதலைச் செய்யக்கூடாது.

இயேசுவின் போதனைகளை மாத்திரம் அல்ல, ஆனால் அவரது நடக்கையையும் நாம் கவனிக்க வேண்டும். நமது வாழ்விற்கு வேதாகமப் பாத்திரங்களை முன்மாதிரிகளாகப் பயன்படுத்துவதில் நாம் வழக்கமாக விழிப்புள்ளவர்களாக இருக்கையில், அந்த விதிக்கு இயேசு விதிவிலக்காக இருக்கிறார். அவரது உதாரணத்தைப் பின்பற்றும்படி கிறிஸ்தவர்களுக்குக் குறிப்பாகக் கூறப்பட்டுள்ளது (1 பேதுரு 2:21; 1 கொரிந்தியர் 11:1). இதன் விளைவாக, சுவிசேஷங்களில் இயேசுவின் செயல்பாடுகளைப் பற்றி நாம் படிக்கும்போது, நாம் "இந்த நிகழ்வில் இயேசுவின் நடக்கை அவரது சீஷர்களுக்கு ஒரு உதாரணத்தை அளிக்கிறதா? ஆம் என்றால் எப்படி?" என்று தொடர்ந்து கேட்க வேண்டும்.

## இலக்கியத்தின் ஒரு சிறப்பு வகை: உவமைகள்

உவமைகள் என்பவை இயேசுவின் போதனைகளில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த வகையில் செயல்பட்டிருப்பதால், மற்றும் அவைகள் அடிக்கடி தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதால், சுவிசேஷங்களில் காணப்படும் உவமைகளுக்கு விளக்கம் அளித்தலுக்கு நாம் சிறப்புக் கவனம் கொடுக்க விரும்புகிறோம்.

### ஒரு விளக்கம்

*உவமை என்றால் என்ன.* உவமைகள் பல்வேறு விதமாக விளக்கப்பட்டுள்ளன. "வானத்திற்குரிய அர்த்தம் கொண்ட பூமிக்குரிய ஒரு கதை" என்பது ஒருவேளை மிகவும் பொதுவான விளக்கமாக இருக்கலாம். உவமை என்பதற்கான (*parabole* என்ற) கிரேக்க வார்த்தை, ஒரு உவமை என்பது ஒரு ஒப்பீடு என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

இயேசு உவமைகளைப் பயன்படுத்தியது ஏன்? உவமைகள் என்பவை, சத்தியத்தைத் தெளிவுபடுத்துகிற விவரிப்புகள் என்று நினைக்கப்படலாம். இருப்பினும், உவமைகள் சத்தியத்தை வெளிப்படுத்த மாத்திரம் அல்ல, ஆனால் அதை மறைக்கவும் அர்த்தப்பட்டன என்று மத்தேயு 13:10-16 வசனப்பகுதி கூறுவதாகக் காணப்படுகிறது. ஆகவே உவமை என்பது, கற்றுக்கொள்ளத் தயாரான இருதயங்கள் கொண்ட மக்களுக்கு சத்தியத்தைப் போதிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஒப்பீட்டை உள்ளடக்கும் ஒரு கதையாக[14] உள்ளது

என்று நாம் முடிவுசெய்யலாம்.

*உவமை என்றால் எது அல்ல.* கிறிஸ்தவத்தின் தொடக்க காலத்தில் இருந்தே, இயேசுவின் உவமைகளை மக்களில் சிலர் ஒப்புவமைகளாக நடத்தி இருந்தாலும், உவமை என்பது ஒரு ஒப்புவமையாக (ஒவ்வொரு விஷயத்திலும் அர்த்தம் கொண்டுள்ள ஒரு கதை[15]) இருப்பதில்லை. ஒப்புவமையில் விளக்கம் அளித்தலுக்கு ஒரு விவரிப்பு என்ற வகையில், ஃபீ மற்றும் ஸ்டுவர்ட் ஆகியோர், (லூக்கா 10:30-37ல்) நல்ல சமாரியன் உவமைக்கு அகஸ்டீன் அவர்களின் விளக்கத்தைக் கொடுத்தனர்.

*ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில்* = ஆதாம்

*எருசலேம்* = பரலோகத்தின் சமாதானத்தின் நரகம், இதில் இருந்தே ஆதாம் வீழ்ந்து போனார்

*எரிகோ* = சந்திரன், மற்றும் அதன் மூலம் ஆதாமின் அழியக்கூடிய தன்மையைக் குறிப்பிடுகிறது.

*கள்ளர்* = பிசாசும் அவனது தூதர்களும்

*அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு* = அவனது அழியாத்தன்மையை எடுத்துப்போட்டு

*அவனைக்காயப்படுத்தி* = அவனைப் பாவம் செய்யும்படி தூண்டி

*குற்றுயிராக விட்டுப் போனார்கள்* = ஒரு மனிதன் வாழுகிறான், ஆனாலும் அவன் ஆவிக்குரிய வகையில் மரித்திருக்கிறான்; ஆகையால் அவன் குற்றுயிராகவே இருக்கிறான்

*ஆசாரியனும் லேவியனும்* = பழைய ஏற்பாட்டின் ஆசாரியத்துவமும் ஊழியமும்

*சமாரியன்* = இது காப்பாளரை அர்த்தப்படுத்துவதாகக் கூறப்படுகிறது; ஆகவே இங்கு கிறிஸ்து தாமே அர்த்தப்படுத்தப்படுகிறார்.

*காயங்களைக் கட்டி* = பாவத்தின் கட்டுகளைக் கட்டுதல்

*எண்ணெயும்* = நல்ல நம்பிக்கையின் ஆறுதல்

*திராட்சரசமும்* = ஊக்கமான ஆவியுடன் ஊழியம் செய்யப் புத்திமதி

*சுயவாகனத்தின்மேல்* = கிறிஸ்து அவதாரமான மாம்சம்

*சத்திரத்துக்கு* = சபை

*மறுநாளிலே* = உயிர்த்தெழுதலுக்குப் பின்பு

*இரண்டுபணத்தை* = இந்த ஜீவன் மற்றும் இனிவரும் ஜீவன் ஆகியவற்றின் வாக்குத்தத்தம்

*சத்திரத்தான்* = பவுல்[16]

உவமை என்பது ஒப்புவமையாக இருப்பதில்லை என்பதால், உவமையில் உள்ள ஒவ்வொரு விபரமும் தனிக்குறிப்புடையதாகவோ அல்லது விசேஷித்த அர்த்தம் கொண்டதாகவோ இருப்பதாக நாம் எதிர்பார்க்கக் கூடாது.[17]

## உவமைகளுக்கு விளக்கம் அளித்தல்

*உவமைகள், தற்காலத்தின் நிபந்தனைகளில் அல்ல, ஆனால் இயேசுவின் நாட்களில் இருந்த பழக்கவழக்கங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவற்றின் நிபந்தனைகளில் விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.* நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தும் விவசாயிகள் கடினமான நடைபாதைகளில் தானியங்களை

விதைப்பதில்லை (மத்தேயு 13:4), மற்றும் இன்றைய நாட்களின் விரோதிகள் ஒரு விவசாயியின் நிலத்தில் நல்ல விதைகளுக்கு மத்தியில் களைகளை விதைப்பதில்லை (மத்தேயு 13:24, 25). இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களின் உணர்வுகள் மற்றும் மதிப்பீடுகளை நாம் புரிந்துகொள்ளவில்லை என்றால் - எடுத்துக்காட்டாக, யூதர்கள் "வரி வசூலிப்பவர்களை" வெறுத்தனர் (லூக்கா 15:1, 2; "ஆயக்காரர்கள்") மற்றும் சமாரியர்களைப் புறக்கணித்தனர் (லூக்கா 10:33) என்பதை நாம் அறியாதிருந்தால் - உவமைகள் புரிந்துகொள்ளப்பட முடியாது.

முதல் நூற்றாண்டு பலஸ்தீன நாட்டின் சந்தர்ப்பப்பொருளில் உவமைகளை நாம் புரிந்துகொள்ள நாடுகையில், அவற்றில் உயர்வுநவிற்சியின் கூறுகள் அடங்கியிருக்கலாம் என்பதை நாம் உணர்ந்தறிதல் அவசியமாகிறது. மத்தேயு 18:23-35ல் இயேசு, ஒரு அரசருக்கு பத்தாயிரம் தாலந்துகள் - இது எவரொருவரும் கடன்படுவதற்கு மிகவும் அதிகமான தொகையாக உள்ளது - கடன் பட்டிருந்த ஒரு மனிதனைப் பற்றிய உவமை ஒன்றைக் கூறினார். விதைப்பவன் உவமையில் அவர், சில நிலங்கள் "நூறு மடங்கு" பலன் தந்ததாகக் கூறினார் (மத்தேயு 13:8), இது இயேசுவின் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் கேள்விப்படாத விஷயமாக இருந்திருக்கும். இந்த விஷயங்கள் ஒவ்வொன்றிலும், மிகைக்கூற்று இயேசுவின் கருத்தை வலியுறுத்துகிறது: (1) நாம் ஒருக்காலும் தேவனுக்குத் திருப்பிச் செலுத்த இயலாத அளவிற்கு, ஆனால் அவரது இரக்கத்தை நாம் வேண்டிக் கேட்கும் அளவுக்கு, நமது பாவம் நம்மை மிகவும் கடனில் வைக்கிறது. (2) நல்ல இருதயங்களைக் கொண்டுள்ள மக்கள் வசனத்தை ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் எவரொருவரின் கற்பனைக்கும் அப்பால் கனிகொடுக்கலாம்.

உவமை என்பது வழக்கமாக ஒரே ஒரு கருத்தையே போதிக்கிறது என்பது நினைவில் வைக்க வேண்டிய முதன்மை விதியாக உள்ளது. ஆகவே விளக்கம் அளிப்பவர், அந்த ஒரு அர்த்தத்தைப் புரிந்து கொள்ள நாடவேண்டும். இதற்கு விதிவிலக்குகள் உள்ளன என்பது உண்மையே. விதைப்பவன் உவமை (மத்தேயு 13:3-9, 18-23; இதற்கு இணைவசனப் பகுதிகளையும் காணவும்), வசனத்தை விதைப்பதன் (சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன்) விளைவு, கேள்விப்படுபவர்களின் ஏற்றுக்கொள்ளும் தன்மையைச் சார்ந்துள்ளது என்று போதிக்கிறது; இருப்பினும் இது, ஏற்றுக்கொள்ளும் தன்மையில் குறைவு உண்டு என்பது தெளிவாக இருந்தாலும், நாம் விதைப்பதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கிறது. ஊதாரி மகன் பற்றிய உவமை (லூக்கா 15:11-32) "மூத்த மகன் பற்றிய உவமை" என்றும் அழைக்கப்படலாம்: மூத்த மகன் மற்றும் விமர்சனம் செய்யும் பரிசேயர்கள் ஆகியோருக்கு நேர் எதிராக, தேவன் பாவிகளை நேசிக்கிறார் மற்றும் நாமும்கூட இவ்வாறே செய்ய வேண்டும் என்று இது முதன்மையாகப் போதிக்கிறது. அத்துடன் கூடுதலாக இது, பாவிகளுக்கு ஆறுதல் மற்றும் நம்பிக்கை உண்டு என்ற செய்தியைக் கொண்டு வருகிறது. வாழ்வில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளவர்கள் நித்தியத்தில் சபிக்கப்படக் கூடும் மற்றும் எதிரிடையாக அதாவது வாழ்வில் சபிக்கப் பட்டுள்ளவர்கள் நித்தியத்தில் ஆசீர்வதிக்கப் படக் கூடும் என்பதால், நாம் நமது மதிப்பீடுகள் பற்றி மறுபடியும் சிந்திப்பது அவசியம் என்று, லாசரு மற்றும் ஐசுவரியவான் உவமை (லூக்கா 16:19-31) சுட்டிக்காண்பிக்கிறது. நியாயப்பிரமாணமும்

*தீர்க்கதரிசனங்களும் இயேசுவுக்கு சாட்சி கொடுக்கின்றன, அவற்றைப் புறக்கணிப்பவர்கள் எவ்விதசாக்குப்போக்குமின்றி அவரை மறுதலிக்கின்றனர் என்று இந்த உவமையின் இரண்டாம் பாகம் (லூக்கா 16:27-31) போதிக்கிறது (அல்லது மறைமுகமாக உணர்த்துகிறது).*

*விதியை நடைமுறைப்படுத்துதல்.* ஒரு உவமையில் போதிக்கப்பட்டுள்ள முதன்மைப் பாடத்தை, விளக்கவுரையாளர்கள் என்ற வகையில் நாம் எவ்வாறு கண்டுபிடிக்க முடியும்? வசனப்பகுதியே நமக்கு இதில் உதவக்கூடும்.

1. *சந்தர்ப்பப்பொருள்.* உவமையை முன் அழைத்தது எது? லூக்கா 10:25-29ன்படி, "எனக்குப் பிறன் யார்?" என்ற கேள்வியினால்தான் நல்லசமாரியன் உவமை தூண்டப்பட்டது. இயேசு பாவிகளுடன் உணவு உண்டதைப் பற்றிய, பரிசேயர்களின் விமர்சனத்திற்கு (லூக்கா 15:2) பதிலாகவே லூக்கா 15ல் உள்ள உவமைகள் வந்தன.

2. *உவமைக்கு முந்திய வார்த்தைகள்.* உவமைக்குச் முந்தி வந்த வார்த்தைகள், அந்த உவமையின் அர்த்தத்திற்குக் குறிப்புகளை அளிக்கலாம். செல்வந்தரான ஒரு மதியீனர் பற்றிய உவமைக்கு முன்பு "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று இயேசுவின் வார்த்தைகள் கூறப்பட்டன (லூக்கா 12:15). பின்வரும் வார்த்தைகளை முன்னுரையாக வைத்ததன் மூலம், அநீதியுள்ள நியாயாதிபதியைப் பற்றிய உவமையின் கருத்தை லூக்கா வெளிப்படுத்தினார்: "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (லூக்கா 18:1). அவர் [லுக்கா] ஆயக்காரன் மற்றும் பரிசேயன் ஆகியோரைப் பற்றிய உவமைக்கும் இதே போன்று செய்தார்: "அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (லூக்கா 18:9).

3. *உவமையைப் பின்தொடர்ந்து வந்த வார்த்தைகள்.* இயேசு ஒரு உவமையை, "இந்தக் கதையின் ஒழுக்கநீதி என்னவென்றால் ..." என்பது போன்ற வார்த்தைகளைக் கொண்டு முடிக்கும்போது, அந்த உவமையில் அவரது முதன்மையான போதனை என்ன என்பது பற்றி நாம் நிச்சயமாயிருக்க முடியும். அநீதியான உக்கிராணக்காரன் பற்றிய உவமையைக் கொடுத்தபின்பு, அதில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன என்பதை இயேசுதாமே குறிப்பிட்டார். அவர், "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" என்று கூறினார் (லூக்கா 16:9).

## முடிவுரை

உவமைகள் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும்? முதலாவது, அவைகள் சபையினால் பயன்படுத்தப்படுவதற்காக எழுதப்பட்டன. சிலவேளைகளில் ஒரு உவமையானது, இராஜ்யத்திற்குப் புறம்பே இருப்பவர்களுக்கு நடைமுறைப்படக்கூடும், ஆனால் சட்டப்படி, அவைகள் விசுவாசித்து செயல்படுவது எவ்வாறு என்பதைக் கிறிஸ்துவின் சீஷர்களுக்குப்

போதிப்பவையாக இருந்தன. இரண்டாவது இயேசு ஒரு பதிலுரையை உண்டாக்குவதற்காக, ஒரு செயலைப் பெறுவதற்காக உவமைகளைக் கூறினார்.[18] நாம் அவற்றை வாசித்து அல்லது போதித்து, ஆனால் நாமும் நமது உரையைக் கேட்பவர்களும் அவற்றின்படி செயல்பட இயங்காது இருந்தோம் என்றால், அவற்றின் நோக்கங்கள் நம்மில் நிறைவேற்றப்படவில்லை என்றாகும்.

---

குறிப்புகள்

*[1]இயேசுவின் வாழ்வின் கடைசி மற்றும் அவர் உயிர்த்தெழுந்தபின் அருளிய தரிசனங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பின்வரும் அதிகாரங்கள் உரைக்கின்றன: மத்தேயு 21-28 (8 அதிகாரங்கள்), மாற்கு 11-16 (6 அதிகாரங்கள்), லூக்கா 19:28-24 (5½ அதிகாரங்கள்), யோவான் 12-22 (11 அதிகாரங்கள்). 90 அதிகாரங்களில், 30½ அதிகாரங்கள் (34 சதவிகிதம்) இயேசுவின் வாழ்வின் கடைசி வாரத்திற்கு (மற்றும் அதைத் தொடர்ந்த நிகழ்வுகளுக்கு) ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன. [2]எடுத்துக்காட்டாக, மத்தேயு 8:28-34ன் படி இயேசு, கதரேனர் நாட்டில் அசுத்த ஆவி பிடித்திருந்த இருவரிடத்தில் இருந்து அசுத்த ஆவிகளைத் துரத்தினார்; ஆனால் இதே நிகழ்வைப் பற்றி அறிக்கை தருவதாகத் தெளிவாகத் தோன்றும், மாற்கு மற்றும் லூக்கா ஆகியோரின் சுவிசேஷங்களின்படி, கெர்கசெனேரின் நாட்டில் இயேசு, அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரே ஒரு மனிதரிடத்தில் இருந்து மாத்திரம் அசுத்த ஆவியைத் துரத்தியிருந்தார்.* [3]George W. DeHoff, *Alleged Bible Contradictions Explained* (Murfreesboro, Tenn.: DeHoff Publications, 1950); J. W. McGarvey, *Evidences of Christianity,* Part III (Lexington, Ky.: N.p.; reprint, Nashville: Gospel Advocate Co., 1974), 30-65; Norman L. Geisler and Ronald M. Brooks, *When Skeptics Ask* (Grand Rapids, Mich.: Baker Books, 1990), 173-75; Gleason L. Archer, *Encyclopedia of Bible Difficulties* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1982). *என்ற புத்தகங்கள், வேதாகமத்தில் உள்ளதென்று மெய்ப்பிக்கப்படாத நேரெதிர்க் கருத்துக்களைக் கையாளுகின்றன. அசுத்த ஆவி பிடித்த மனிதன் (அல்லது மனிதர்கள்) பற்றித் தெளிவாகத் தெரியும் நேரெதிர்க்கருத்து பின்வரும் புத்தகத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது:* Archer, 324-25. *[4]ஒரு விசாரணையில் மூன்று சாட்சிகள் ஒரே விதமான வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒரே வரலாற்றை கூறுவார்கள் என்றால், அவர்கள் பயிற்றுவிக்கப் பட்டிருந்தனரோ மற்றும்/அல்லது தாங்கள் கூறப் போவது குறித்து ஏற்கனவே ஒப்பந்தம் செய்துகொண்டனரோ என்று சந்தேகம் எழுகிறது. குறைந்த பட்சமாகக் கூறுவதென்றால், ஒரே விதமான வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தியதால், தனிப்பட்ட சாட்சி என்ற வகையில் அவர்களின் மதிப்பு விட்டுக்கொடுக்கப்படுகிறது. அதுபோன்றே, ஒரே வரலாறுகளைக் கூறுவதற்கு ஒரேவிதமான வார்த்தைகளை பொருட்சுருக்கச் சுவிசேஷங்கள் பயன்படுத்துகின்றன என்ற உண்மையானது, எழுத்தாளர்கள் ஒரே ஆதாரமூலங்களைப் பயன்படுத்தினர் அல்லது ஒருவர் மற்றவருடையதை ஆதாரமூலங்களாகப் பயன்படுத்தினார் என்று கல்வியாளர்கள் நினைக்கக் காரணமாகிறது. [5]இந்த அட்டவணையில், "தனித்தன்மைகள்" என்பது சுவிசேஷப் புத்தகம் ஒன்று தன்னில் தனித்துவமாக உரைக்கும் விஷயங்களின் சதவிகிதத்தைக் குறிக்கிறது; "கருத்துப் பொருத்தங்கள்" என்பது ஒரு சுவிசேஷப் புத்தகம் மற்ற சுவிசேஷப் புத்தகங்களுடன் பகிர்ந்துகொள்ளும் விஷயங்களின் சதவிகிதத்தைக் குறிக்கிறது.* [6]Everett F. Harrison, *Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 143; Brooke Foss Westcott, *An Introduction to the Study of the Gospels,* 6th ed. (Cambridge: Macmillian and Co., 1881), 195. *[7]இந்தச்*

*சாத்தியக்கூறுகளில் சிலவற்றைப் பற்றிய ஒரு கலந்துரையாடல்* Everett F. Harrison, *Introduction to the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 142-54 *என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.* [8]*பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் வரலாற்றுப் புத்தகங்களில் ஆதாரமூலங்களைப் பயன்படுத்தினர் என்பது தெளிவு, மற்றும் லூக்கா, தொடக்ககாலக் கிறிஸ்தவம் பற்றிய தமது வரலாற்றை எழுதுவதில் மற்ற ஆதாரமூலங்களைப் பயன்படுத்தினார் அல்லது அவற்றை ஆராய்ச்சி செய்தார் என்பது தெளிவு (லுக்கா 1:1-4). மேலும் தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கூற்றுப்படி, பேதுரு, மாற்கு சுவிசேஷத்தின் ஆதார மூலமாக இருந்தார். தாங்கள் எழுதப்போவது என்ன என்பதைப் பற்றி ஏற்கனவே சிலவற்றை அறிந்திருந்த மக்களை (கண்ணாரக் கண்ட சாட்சியங்களாக இருந்த மக்கள் போன்றவர்களை) தேவன் ஏவினார் மற்றும் அதன்பின்பு, தேவன் மிகச்சரியாக விரும்பிய விளைவுகளைக் கொண்டு வரும்படி எழுதுவதற்குத் தேவன் அவர்களை ஏவினார் என்பது ஏவுதலின் பொதுவான விதியாக உள்ளது. எழுத்தாளர் ஏற்கனவே கொண்டுள்ள தகவல்களைப் பயன்படுத்துவதில் ஒரு எழுத்தாளரை அவர் ஏவ முடிந்தது என்றால், ஆதாரமூலங்களைப் பயன்படுத்துதல் மற்றும் ஆராய்ச்சி செய்தல் மூலமாக தகவல்களைச் சேகரிப்பதிலும், ஒரு எழுத்தாளரை அவர் வழிநடத்தி இருக்க முடியும்.* [9]*ஒவ்வொரு புத்தகத்தின் விஷயத்திலும், அந்த சுவிசேஷம் யார்பெயரைக் கொண்டுள்ளதோ, அவரால் அது எழுதப்பட்டது என்று யூகிக்கப்பட்டுள்ளது. சுவிசேஷங்கள் யாவும் பெயரற்றதாக இருக்கையில், மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோர் இதை எழுதினர் என்று கூறும் பழங்காலப் பாரம்பரியத்தை நம்புதல் சரியானதாக உள்ளது. சுவிசேஷங்களின் பாத்திரங்களாக இங்கு தரப்பட்டுள்ள எவரொருவருடைய பெயரும் வழக்கிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும்; சுவிசேஷங்களின் எழுத்தாளர், தோன்றிய இடம், தேதி அல்லது நோக்கம் ஆகியவற்றைப் பற்றிய சில உண்மைகள் எல்லாக் கல்வியாளர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.* [10]"Pericope" *என்பது ஒரு தனிப்பட்ட வரலாறாக அல்லது கூற்றாக உள்ளது.* (Gordon D. Fee and Douglas Stuart, *How to Read the Bible for All Its Worth* [Grand Rapids, Mich.: Zondervan 2003], 132.)

[11]*ஃபீ மற்றும் ஸ்டுவார்ட் ஆகியோர், சுவிசேஷங்களைக் கையாள்வதில் ஒருவர் "கிடை மட்டமாக நினைக்கவும்" மற்றும் "நேர்க்குத்தாக நினைக்கவும்" வேண்டும் என்று கூறினர். "கிடைமட்டமாக நினைத்தல்" என்பது, "மற்ற சுவிசேஷங்களில் உள்ள இணைகள் பற்றி அறிந்திருத்தல்" என்பதாக உள்ளது; "நேர்க்குத்தாக நினைத்தல்" என்பது "இயேசு மற்றும் சுவிசேஷ ஊழியர் ஆகிய இருவரின் வரலாற்றுச் சந்தர்ப்பப் பொருள்களையும் பற்றி அறிந்திருத்தல்" என்பதாக உள்ளது* (Fee and Stuart, 135-39). [12]*உண்மையில் சமீபத்திய ஆண்டுகளில் சுற்றுக்கு விடப்பட்ட, மார்க்கத்திற்கு எதிரான ஒரு உபதேசமானது, சுவிசேஷப் புத்தகங்கள் உண்மையில் பழைய ஏற்பாட்டின் ஒரு பாகமாக உள்ளன என்றும் இயேசுவின் போதனைகள் இன்றைக்கு நமக்கு மோசேயின் போதனைகள் போன்றே நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்றும் போதிக்கிறது.* [13]*இளம் செல்வரான அதிகாரிக்கு, "[பழைய ஏற்பாட்டின்] கற்பனைகளைக் கைக்கொள்" என்பவையே இயேசுவின் தொடக்க வார்த்தைகளாக இருந்தன (மத்தேயு 19:17, 18), இது இன்றைய நாட்களின் மக்களுக்கு நடைமுறைப்படுவதில்லை.* [14]*சிலவேளைகளில் புதிய ஏற்பாடு, "உவமை" என்ற வார்த்தையை கதைகளைப் பற்றியதல்லாத கூற்றுகளுக்கும் பயன்படுத்துகிறது. இருப்பினும், இந்தப் பாடத்தில் நாம் கதை உவமைகளைப் பற்றியே கவனமாக இருக்கிறோம்.* [15]*கதை உவமைகளில் சிலவற்றிற்கு இயேசுவின் சொந்த விளக்கங்கள், அந்தக் கதையில் உள்ள பல விபரங்கள் ஆவிக்குரிய உண்மை நிலைகளாக*

இருப்பதால், அவைகள் ஒப்புவமைகள் போன்று இருப்பதாகக் கருத்துத் தெரிவிக்கின்றன. விதைப்பவன் உவமை (மத்தேயு 13 மற்றும் இதன் இணைவசனங்கள்) மற்றும் களைகள் பற்றிய உவமை (மத்தேயு 13) ஆகியவற்றைக் கண்ணோக்குங்கள். இயேசுதாமே ஒப்பீடுகளை ஏற்படுத்தாத வரையில் நாம் அவ்வாறு செய்வதில் நியாயமானவர்களாக இருப்பதில்லை. [16]Fee and Stuart, 150. [17]இன்றைய நாட்களில் பல விளக்கவுரையாளர்கள், உவமைகளை ஒப்புவமைகளாக நடத்தி, அந்தக் கதைக்கும் அது இன்றைய நாட்களில் குறிப்பிடும் ஆவிக்குரிய உண்மை நிலைக்கும் இடையில் இணைவுகளைக் கருத்தாகத் தெரிவிக்கும் ஒப்பீடுகளைப் பட்டியல் இடுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு நடைமுறை கேள்விகேட்கப்படக் கூடியதாக உள்ளது. இயேசுவினால் அடையாளப்படுத்தப்பட்ட விபரங்கள் மற்றும்/அல்லது கதையின் முக்கிய கருத்து ஆகியவை மாத்திரமே ஏதாவது உறுதிப்பாட்டுடன் ஒப்பிடப்பட முடியும். [18]ஃபீ மற்றும் ஸ்டுவார்ட் ஆகியோர், "... கதை உவமைகள் அவற்றைக் கேட்பவர்களின் பகுதியில் ஒரு பதில் செய்யப்படுவதற்கு ஒரு வழிமுறையாகப் பணிசெய்கின்றன அல்லது அவ்வாறு செய்யும்படி அவர்களை அழைக்கின்றன" என்று கூறினர் (Fee and Stuart, 152).